**பாரதிதாசன் பல்கலைக்கழகம்,**
**(Accredited with "A+" Grade by NAAC)**
**பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024**
**தமிழ்நாடு, இந்தியா**

**முனைவர் சு. சீனிவாசராகவன், M.A., M.L.I.Sc, Ph.D**
**தேர்வு நெறியாளர் (பொ)**

**அலுவலகம் : 0431- 2407016, 2407060**
**தொலைப்படி: 0431 – 2407444**
**மின்னஞ்சல் : coe@bdu.ac.in**
**வலைத்தளம்: www.bdu.ac.in**


---

**கடித எண் : தேர்வுப்பிரிவு/முதுநிலை/செய்முறைத்தேர்வுகள் /ஏப்ரல் 2020** **நாள் : 03.02.2020**

பெறுநர்

முதல்வர்,
இணைவு பெற்ற (தன்னாட்சி பெறாத) கல்லூரிகள்

அய்யா/அம்மையீர்,

பொருள்: முதுநிலை மாணவர்களுக்கான ஏப்ரல் 2020-ல் நடைபெறவிருக்கும் முதுநிலை பட்டமேற்படிப்பு மற்றும் பட்டயப் படிப்புகள் - செய்முறைத் தேர்வு, களப்பணி தேர்வுகள், திட்டக்கட்டுரை மற்றும் வாய்மொழித்தேர்வுகள் துவங்கும் நாள் தெரிவித்தல் - தொடர்பாக.

-----

ஏப்ரல் 2020-ல் நடைபெறவிருக்கும் முதுநிலை பட்டமேற்படிப்பு மற்றும் பட்டயப்படிப்பு பாடங்களுக்கான செய்முறைத் தேர்வுகள், களப்பணி தேர்வுகள், திட்டக்கட்டுரை மற்றும் வாய்மொழித் தேர்வகளுக்கான கால அட்டவணை கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

## பட்டமேற்படிப்பு மற்றும் பட்டயப் படிப்புகள் - செய்முறைத் தேர்வுகள்
### (இரண்டாம் மற்றும் நான்காம் பருவம்)
### (M.A./M.Sc./M.Com./MSW & All P.G. Diploma Courses)

திருச்சி, கரூர், அரியலூர் பெரம்பலூர் மாவட்டங்களைச் சார்ந்த இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் - 18.03.2020 – 23.03.2020

புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்களைச் சார்ந்த இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் - 26.03.2020 – 30.03.2020

செய்முறைத் தேர்விற்கான கால அட்டவணையைத் தயார் செய்து 04.03.2020-ற்குள் இரண்டு நகல்கள் தனித்தனியாக பாடவாரியாக எடுத்து இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்பி **ஓப்புதல் பெற்ற பிறகே** செய்துறைத் தேர்வுகளை நடத்திக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் தங்கள் கல்லூரியில் பயிலும் அனைத்து மாணவர்களின் அகமதிப்பெண்கள், செய்முறைத்தேர்வு மதிப்பெண்கள் மற்றும் களப்பணித் தேர்விற்கான மதிப்பெண்கள் ஆகியவற்றை **தேர்வு முடிந்த மறுநாளே அகம் மற்றும் புறத் தேர்வாளர்கள் கையொப்பம் மற்றும் கல்லூரி முதல்வரின் மேலொப்பத்துடனும் தேர்வுநெறியாளருக்கு அஞ்சல் வழி அனுப்பி வைக்கவும்.** மேலும் 02.04.2020-ம் தேதிக்குள் இணையதளத்தின் வாயிலாக (www,bdu.ac.in/exam-esubmit) தேர்வுநெறியாளருக்கு அனுப்பிவைக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அஞ்சல் வழி அனுப்பப்படும் மற்றும் இணையதள வாயிலாக அனுப்பப்படும் மதிப்பெண்களில் மாறுபாடுகள் இருப்பின் அஞ்சல்வழி அனுப்பப்படும் மதிப்பெண்ணே ஏற்றுக் கொள்ளப்படும். இது தொடர்பாக பின்னாளில் வரும் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படமாட்டாது. இக்கடிதத்தின் மீது தனிக்கவனம் செலுத்தி உடன் மதிப்பெண்களை அனுப்பி வைக்குமாறு கனிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**MSW களப்பணி தேர்வுகள் (இரண்டாம் மற்றும் நான்காம் பருவம்)**

திருச்சி, கரூர், அரியலூர் பெரம்பலூர் மாவட்டங்களைச் சார்ந்த இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் - **20.03.2020 (வெள்ளிக்கிழமை)**

புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்களைச் சார்ந்த இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் - **24.03.2020 (செவ்வாய்கிழமை)**

மாணவர்கள் தங்களது ஆய்வுக்கட்டுரைகளைக் கல்லூரியில் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் - **30.03.2020 (திங்கள்கிழமை)**

**பட்ட மேற்படிப்பு/பட்டயப்படிப்பு, திட்டக்கட்டுரை, வாய்மொழித்தேர்வுகள் (நான்காம் பருவம்)**
**(M.A./M.Sc./M.Com./MSW & All P.G. Diploma Courses)**

திருச்சி, கரூர், அரியலூர் பெரம்பலூர் மாவட்டங்களைச் சார்ந்த இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் - **03.04.2020 (வெள்ளிக்கிழமை)**

புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்களைச் சார்ந்த இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் - **07.04.2020 (செவ்வாய்கிழமை)**

**MCA செய்முறைத்தேர்வுகள் துவங்கும் நாள்** : 22.04.2020 (புதன்கிழமை)

**MCA மற்றும் MBA திட்டக்கட்டுரை வாய்மொழித் தேர்வு:**

திருச்சி, கரூர், அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களை சார்ந்த இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் : **04.05.2020 (திங்கள்கிழமை)**

புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவடங்களைச் சார்ந்த இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் : **08.05.2020 (வெள்ளிகிழமை)**

மேலே குறிப்பிட்டுள்ள தேதிகளில் மட்டுமே செய்முறைத் தேர்வுகள், களப்பணிகள், திட்டக்கட்டுரை மற்றும் வாய்மொழித் தேர்வுகள் அனைத்தையும் அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த கல்லூரிகள் நடத்துமாறு அறிவுறுத்ததப்படுகிறார்கள். எக்காரணத்தைக் கொண்டும் குறிப்பிட்ட தேதிகளுக்குப் பின்னர் நடத்த அனுமதி கிடையாது எனக் கனிவுடன் தெரிவிக்கலாகிறது.

இக்கடிதம் கிடைக்கப்பெற்றமைக்கு ஒப்புதல் அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**தேர்வு நெறியாளர்(பொ)**